செய்தி வெளியீடு எண்: 127 நாள்: 27.02.2013

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

**பொது விநியோகத் திட்டம் – குடும்ப அட்டைகள் புதுப்பித்தல்**
**உள்தாள் இணைத்தல் – 2013, மார்ச் 1ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை நீட்டித்தல்**

---

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்களுக்கான குடும்ப அட்டைகளில் உள்தாள் இணைத்து வழங்கும் பணி 1.1.2013 முதல் தொடங்கி பிப்ரவரி மாதம் இறுதிவரை நடைபெற்று வந்தது. உள்தாள் இணைக்கும் பணி சிறிது காலம் நீட்டிக்க வேண்டும் என்று குடும்ப அட்டைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின் அடிப்படையில், உள்தாள் இணைக்கும் பணி 2013 மார்ச் 1ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**